1974 ஏப்ரல் 4]

திரு. கே. டி. கே. தங்கமணி : பாம்பன் பாலம் மாதிரி இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று. இது இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கிறது. இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த ரோடுக்கான முழுப் பணமும் கிடைக்கவில்லை. இடையில் இருக்கிற பாலங்களைக் கட்டுவதற்கான வேலைகள்தான் இப்போது நடைபெற்று வருகின்றன.

New bridge across Coleroon.

* 752 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a new bridge at Coleroon connecting Srirangam and Tiruchirappalli; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை 45-ல் மைல் 193/2 (கி.மீ. 312/8)ல் கொள்ளிட நதியின் குறுக்கே 64.116 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மத்திய அரசு எப்போது அனுமதி அளித்தது? வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேசிய நெடுஞ்சாலையில் வருவதால் எஸ்டிமேட் தயாரித்து டெல்லி போக வேண்டும், பின்னர் டெண்டர் கால்பார் பண்ணி போக வேண்டும்—இப்படி ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஒப்புதல் பெற வேண்டியிருப்பதால் நம் மாநிலத்தில் மட்டுமல்ல—எல்லா இடங்களிலும் தேசிய நெடுஞ்சாலை வேலை தாமதம்தான் ஆகும். அதைத் தவிர்க்க முடியாது.

New over bridge at Coimbatore.

* 753 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works with reference to question No. 82 answered on 11th August 1973 be pleased to state the estimated cost of the proposed construction work of the over bridge near the bus stand in Coimbatore town ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதிப்பீட்டுத் தொகை ரூ. 80 லட்சம் ஆகும்.

திரு. நா. வீராசாமி : 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கும் இந்தப் பாலத்தை மக்கள் எக்சிபிஷன் வந்து பார்ப்பது போல வந்து பார்க்கிறார்கள். அந்தப் பாலம் ஒரு மாதத்தில் இடிந்து விழும் என்றார்கள். ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. பாலம் இடிந்து விழவில்லை—அப்படி பிரசாரம் செய்து வந்தவர்கள் அதை உணர்ந்தார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது கட்டப்பட இருக்கிற பாலத்திற்கான மதிப்பீடு 80 லட்சம் என்று சொன்னேன். (சிரிப்பு).

உறுப்பினர் குறிப்பிடுவது 52 லட்சத்தில் கட்டப்பட்ட பாலம்—தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் அந்தப் பாலம் ஒரு மாதத்தில் இடிந்து விடும் என்று பிரசாரம் செய்ததை நானும் அறிவேன்—அது உண்மை. நிச்சயம் பாலம் விழாது—உறுதியாகத்தான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் ஏற்கனவே ஒரு முறை இடிந்து விழுந்த காரணத்தினால்தான் மக்கள் அப்படி பேசிக்கொண்டார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. கோவை செழியன் : கட்டுகிற பாலங்களைக் கட்டி முடிப்பதற்கு முன்னாடியே, திறப்பு விழா நடத்தி விடுகிறார்கள் ; பாதி வேலை பாக்கி இருக்கிறது. அதற்குள் அவ்வளவு அவசரமாக திறப்பு விழா நடத்தியிருக்கிறார்கள். ஏன் கட்டி முடித்த பிறகு திறப்பு விழா நடத்தியிருக்கலாமே ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூலக் கேள்விக்குச் சம்பந்தப்படாத பாலம் பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். பாலம் பாக்கி இருந்தது என்பதல்ல. மேம்பாலம் முடிவடைந்து விட்டது. இரயில் போகிற பாலமும் கட்டி முடிந்துவிட்டது. கீழே, கை வண்டி இழுத்துச் செல்கிற இடத்திலே, தண்ணீர் ஊற்று வந்த காரணத்தினால், வேலையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலை பரிபூரணமாக முடிந்துவிட்டது. மக்கள் மேலே செல்வதற்காகவும், கார்கள், பஸ்கள், ஆட்டோரிக்ஷாக்கள் இவைகள் போவதற்காக, மேலே அந்தப் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது.

1974 ஏப்ரல் 4]

திரு. செ. அரங்கநாயகம் : கட்டவிருக்கிற பாலம், பஸ் ஸ்டாண்டுக்கு அருகாமையிலேயா அல்லது வட கோயம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேலேயா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பாலம் கோயம்புத்தூர் பஸ ஸ்டாண்டுக்குப் பக்கத்திலே என்றுதான் கேள்வியே.

திரு. எம். தேவராசன் : இந்தமாதிரி பெரிய நகரங்களில், லெவல் கிராசிங் இருக்கிற நெருக்கடியான இடங்களில் எல்லாம் பாலங்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே, ஒரு துணைக்கேள்விக்கு பதிலளிக்கும்போது சொன்னேன். தமிழ் நாட்டில் எங்கெங்கே இப்படி லெவல் கிராசிங், ரயில்வே கிராசிங் இருக்கிறதோ அங்கேயெல்லாம் மேம்பாலம் அமைப்பது அரசின் நோக்கம். வேலைத் திட்டங்கள் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

Bridge on Marthandam-Panachamod road

*7 54 Q.—THIRU J. JAMES :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether this Government have received a representation dated 8th July 1973 from the District Collector of Kanyakumari regarding the construction of a bridge at Gnaranvilaikadavu across Kuzhithurai river at Marthandam-Panachamod road; and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் சம்பந்தமாக முன்னால் பொதுப் பணித்துறை பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், இந்தப் பாலத்தை கட்டுவது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று இங்கே வாக்குறுதி அளித்தார்கள். பரிசீலனை என்பது அந்தப் பாலத்தைக் கைவிடுவதற்கா அல்லது கட்டுவதற்கா என்று கேட்டதற்கும் கட்டுவதற்கு என்றுதான் வாக்குறுதி அளித்தார்.